# ஜோலார்பேட்டை நகராட்சி

## அவசரக் கூட்டம்

2023-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் தேதி (25.**01.2023**) புதன் கிழமை காலை 10.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

**குறள் எண்.11 "வான்நின்று உலகம் வழங்கி வருதலால் தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"**

(மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்ற உணரத்தக்கதாகும்)

**பொருள்கள்**

1) அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ME.3) துறை, நாள் 24.08.2022-ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 33553/2022/EA2-SWM-13, நாள் 10.01.2023-ல் ஜோலார்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக சேவை வழங்குபவர்/நிறுவனம்/ ஒப்பந்ததாரர் (Sevice Provider/Agency/Contractor) அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு அனுமதித்து உத்தரவு வரப்பெற்றுள்ளது.

| Quantity of Waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated base cost per day (Rs .in lakh) | Estimated base cost per year (Rs. In lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. In lakh) | Estimated total cost per year ((Rs. In lakh) |
|---|---|---|---|---|---|
| 9.72 | 3943.77 | 0.38 | 138.70 | 26.35 | 165.05 |

மேலும், நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும், நாள் ஒன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டும், அதற்குரிய தொகையினை பிரதி மாத பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S.No | Category | Available Vehicles | After ULB use available for Rent | Rent fixed by per day | Collectable Rent per day |
|---|---|---|---|---|---|
| 1 | PUSHCART | 0 | 0 | 15 | 0 |
| 2 | BOV | 15 | 15 | 100 | 1500 |
| 3 | LCV | 3 | 3 | 200 | 600 |
| 4 | HCV | 1 | 0 | 400 | 0 |
| | **TOTAL** | **19** | **18** | **2100** | **1800** |

மேலும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் இதற்குமேல் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| S.No | Activity | No of Permanent Sanitary Worker Assigned | Type | HCV |
|---|---|---|---|---|
| 1 | For Bushes Cleaning | 4 | HCV | 1 |
| 2 | For Removal of Road side Earth | 2 | | |
| 3 | For Removal of silt in storm water drain | 3 | | |
| 4 | Park Sweeping | 1 | | |
| 5 | MCC (Wet waste processing Centers) | 7 | | |
| 6 | RRC (Dry waste handling center) | 4 | | |
| | **Total** | **21** | | |

மேலும், தனியார் ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Description of the activity | No's/Length |
|---|---|---|
| 1 | Door to Door collection of segregated waste from Households using pushcart and handover the waste to processing center / handling facilities | 730 Households |
| 2 | Door to Door collection of segregated waste from Households using BOV and handover the waste to processing center / handling facilities | 4381 Households |
| 3 | Door to Door collection of segregated waste in Households using LCV and handover the waste at processing center / handling facilities | 2191 Households |
| 4 | Door to Door collection of segregated waste in small size Commercial Establishment using Low Commercial Vehicle and handover the waste at processing center / handling facilities | 800 Commercial Establishment |
| 5 | Sweeping the Bus Route Road on daily basis and handover the waste processing center/handling facilities | 11.35 KM of Roads |
| 6 | Sweeping the Bus Route Streets on daily basis and handover the waste at processing center/handling facilities | 10.24 KM of Streets |

மேற்கண்டவாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளின்படியும் வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு மூன்று வருடங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வருடத்திற்கான தோராய செலவினம் ரூ.165.05 இலட்சத்திற்கான செலவினங்களையும் மற்றும் நாளிதழ்களில் விளம்பரம் செய்ய தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேலும் இதர செலவினங்களுக்கும் நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், பற்றாகுறை ஏற்படும் போது 15வது நிதிக்குழுவின் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வரப்பெறும் தொகை (Tied Grant) மூலம் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.106/2023/எச்1

நகரமன்ற தலைவர்

ஜோலார்பேட்டை நகராட்சி